பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6=00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 24 வியாழக்கிழமை (07-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 102

# 6 ரோந்துப் படகுகள் அமெரிக்கா வழங்கும்

## ஸ்ரீலங்கா கடற்படைக்கு

கொழும்பு, மார்ச் 7

அமெரிக்காவிடமிருந்து ஆறு அதிவேக ரோந்துப் படகுகளை ஸ்ரீலங்கா கடற்படை கொள்வனவு செய்யவிருக்கின்றது.

கடற் புலிகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு 25 மீற்றர் நீளமுடைய இத்தகைய ரோந்துப் படகுகள் அவசியம் என்று ஸ்ரீலங்கா கடற்படை உணருகின்றது என 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இத்தகைய மூன்று ரோந்துப் படகுகளை ஸ்ரீலங்காவுக்கு வழங்குவதற்கான ஒப்பந்தத்தை அமெரிக்கா ஏற்கனவே ஸ்ரீலங்காவுடன் செய்துள்ளது என்றும் —

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் புலிகள் தாக்குதல்

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வலிகாமத்தில் திருநெல்வேலிப் பகுதியில் நேற்று முன்தினம் காலையில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலையடுத்து படையினர் அப்பகுதியில் அப்பாவி பொது மகன் ஒருவரைச் சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் குறித்து மேலதிக தகவல்கள் கிடைக்கவில்லை. (உ-7)

## தமிழீழ மீட்புநிதிக் கடன்:

## இரண்டாம் கட்ட மீளளிப்பு வன்னியில் 9, 10 ஆம் திகதி!

சாவகச்சேரி, மார்ச் 7

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளலுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இதுவரை மீளளிப்பை பெறாதவர்களில் — வன்னியைச் சேர்ந்தவர்களினதும், வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் வதிபவர்களினதும் — நலன் கருதி வன்னிப் பகுதியில் இரண்டாம் கட்ட மீளளிப்பு எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் — ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேர ஒழுங்கின் படி — இடம்பெறவிருக்கிறது.

கடன் பத்திரத்தை தவறவிட்டவர்களின் நலன் கருதி மீளளிப்பதற்கு தேர்ந்தெடுத்தவர்களின் கடன் பத்திரத் தொடர்பு எண்ணுடன் அவர்களின் முழுப் பெயர்களும் பத்திரிகைகளில் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தன.

மீளளிப்பு நிலையங்களுக்கு வரும்போது அடையாள ஆவணம், கடன் பத்திரதாரரின் ஒப்பத்தை உறுதிப்படுத்தி கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம், குடும்ப அட்டை ஆகியவற்றை எடுத்து வருமாறு நிதித்துறை கேட்டுள்ளது. (உ-3)

## படை முகாம்களுக்கருகே புதிய மின்மாற்றிகள்!

மட்டக்களப்பு, மார்ச் 7

மட்டக்களப்பு மாவட்டத்தில் மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டு வருவதையடுத்து —

புதிய மின்மாற்றிகள் படையினரின் முகாம்களுக்கு அருகில் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உப்போடையில் தகர்க்கப்பட்டு மின்மாற்றிக்குப் பதிலாக மாமாங்கம் முகாமுக்கு அருகிலும் —

சென்ரல் வீதியில் இருந்த மின்மாற்றிக்குப் பதிலாக இராணுவ பொலிஸ் தலைமையகத்துக்கு அருகிலும் — புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கல்லடி மின்மாற்றியை சுற்றி மண்மூடைகள் அடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு முன்பாக இராணுவ காப்பரண் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. பார் வீதிக்கு அருகில் உள்ள மின்மாற்றிக்கு முன்பாகவும் இராணுவ காப்பரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை 54 மின்மாற்றிகள் தகர்த்தெறியப்பட்டுள்ள போதிலும்' அவற்றில் 15 மின்மாற்றிகளே மீள அமைக்கப்பட்டுள்ளன. (உ-3)

## அ'புரவில் சிப்பாய் பலி!

கொழும்பு, மார்ச் 7

அநுராதபுரம் மாவட்டம் கஜுவாவவ பகுதியில் காவலரண் ஒன்றில் இராணுவமும் பொலீஸாரும் கூட்டாக பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தபோது அந்தக் காவலரண் மீது நேற்று முன்தினம் இரவு 1 30 மணிக்கு விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்

பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் இத்தகவலை வெளியிட்டன. [உ-3-6]

## 15 தமிழர் கைது

கொழும்பு, மார்ச் 7

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் நேற்று அதிகாலை 3 மணி முதல் காலை 9 மணி வரை பொலீஸார் நடத்திய தீவிர தேடுதல் வேட்டையின் போது 15 தமிழர்கள் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (உ-6)

## அபுதாபியில் சிங்கள பிரமுகர் கைது!

கொழும்பு, மார்ச் 7

ஸ்ரீலங்கா அரசுக்கு வழங்குவதற்கு அபுதாபியில் தேசிய பாதுகாப்பு நிதி திரட்டிய சிங்கள அமைப்பின் தலைவர் அருண கித்சிறி அந்நாட்டுப் பொலீஸாரல் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை விடுவிக்க தூதுவர் மட்டத்தில் ஸ்ரீலங்கா அரசு எடுத்த முயற்சிகள் அனைத்தும் பலனளிக்கவில்லை எனவும் —

அவரை விடுவிக்க பிரதம மந்திரி சிறிமாவும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் தற்போது கடும் முயற்சிகள் எடுத்துவருகின்றனர் எனவும் ''லங்காதீப'' சிங்களப் பத்திரிகை தெரிவித்தது. (உ-10)

# வவுனியாவில் 3 அப்பாவித் தமிழர்கள் படையினரால் வெட்டிக் கொலை!

சாவகச்சேரி, மார்ச் 7

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள வவுனியாவில் பூவரசங்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் சாளம்பைக் குளத்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த தமிழர்கள் மூவரை கடந்த திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் வெட்டிக் கொலை செய்திருப்பது அம்பலத்துக்கு வந்துள்ளது.

கனகசபை கனகேஸ்வரன் (வயது 32), கனகசபை கனகலிங்கம் (வயது 25), இவர்களின் மைத்துனா தாமோதரலிங்கம் புலேந்திரராஜா (வயது 38) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

புலேந்திரராஜாவின் மனைவியான சிவயோகராணி வெட்டுக் காயங்களுடன் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சீருடை அணிந்த ஒருவரும் மற்றும் சாதாரண உடை அணிந்த வேறு இருவரும் ஒன்றாக வந்து தனது கணவரையும் சகோதரர்களையும் ஒவ்வொருவராக வெளியே கூட்டிச் சென்று வெட்டிக் கொலை செய்ததாகவும் —

அதனைத் தடுக்க முற்பட்ட சமயம், தாம் வெட்டுக் காயங்களுக்கு இலக்கானதாகவும்—

கொலையாளிகளில் ஒருவர் அண்மையில் தங்களது பண்ணைக்கு காய்கறி வாங்க வந்த இராணுவச் சிப்பாய் என தான் அடையாளம் கண்

(4 ஆம்பக்கம் பார்க்க)

# கடற்புலிகள் வசம் நீரடி ஸ்கூட்டர்கள்!

## கடற்படைக்கு தகவல் கிடைத்துள்ளதாம்

கொழும்பு மார்ச். 7

நீருக்குக் கீழ் இருந்து கடற்படைக் கலங்களைத் தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் நீரடி ஸ்கூட்டர்களை (Water Scooter) பயன்படுத்துகிறார்கள் என கடற்படையினர் நம்புவதாக ''திவயின'' பத்திரிகை தெரிவிக்கிறது.

'டோரா' படகுகள் மூன்றையும் கட்டளைக் கலன்கள் உட்பட கடற்படைக்குச் சொந்தமான பல கலன்களை அழிப்பதற்கு கடற்புலிகள நீரடி ஸ்கூட்டர்களையே பயன்படுத்தியுள்ளனர் என கடற்படைக்குத் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

மணித்தியாலம் ஒன்றுக்கு சுமார் 3 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடிய இந்த ''ஸ்கூட்டர்கள்'' பற்றியில இயங்க வல்லனவாம். இவ்வாறான நீரடி ஸ்கூட்டர்கள் முதலில் வளைகுடாப் பிரதேசத்தில் பயன்படுத்தப்பட்டன

''விடுதலைப் புலிகளிடம் இந்த நீரடி ஸ்கூட்டர்கள் மாத்திரமே உள்ளன. அவர்களிடம் நீர்மூழ்கிக கப்பல்கள் இல்லை. நீர் மூழ்கிக் கப்பலுக்குத் தேவையான ''டோர்பிட்டோ'' ஒன்றுக்கு பல லட்சம் டொலர் செலவாகும்.'' — என கடற்படைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்புலிகளால் பயன்படுத்தப்படுவதாக நம்பப்படும் நீரடி ஸ்கூட்டர்களைக் கண்டறியும் உபகரணம் இதுவரை கடற்படையிடம் இல்லை எனவும் —

தற்போது நீர்மூழ்கி எதிர்ப்புக் கலம் சீனாவிலிருந்து கிடைத்துள்ளதால் அதைக் கொண்டு நீருக்குக்கீழ் இருந்து கடற்படைக் கலங்களைக் காக்க வரும் எந்தவொரு பொருளையும் அழிக்கமுடியும் எனவும் —

மூத்த கடற்படை அதிகாரி தெரிவித்ததாக அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டது.

# தீர்வுத் திட்டத்தை வாபஸ் பெறுமாறு வற்புறுத்தி பிக்குகள் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 7

அரசாங்கம் முன் வைத்திருக்கும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் — அரசமைப்புக்கான திருத்தம் —

தமிழ்ப் பிரிவினை வாதிகளின் இலட்சியமான சுதந்திர ஈழ ராஜ்யம் உருவாகுவதற்கு அடிப்படையாக அமையும்.

அதனால் தீர்வுத் திட்டத்தை செயற்படுத்துவதை நிறுத்தவேண்டும். அதனை வாபஸ் பெறவேண்டும்.

இவ்வாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பௌத்த பிக்குமார் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழித்து, ஒற்றையாட்சி இலங்கைக்குள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் சகோதரர்களாக வாழும் சூழ்நிலையை அரசு உருவாக்கவேண்டும் என்று கோரும் தீர்மானமும் அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (அ-3)

## மட்டக்களப்பில் புதிதாக மேலும் பல காவலரண்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல புதிய இடங்களிலும், கேந்திர முக்கிய நிலையங்களிலும் புதிதாக இராணுவ காவலரண்கள் அமைக்கப்பட்டுவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கல்லடிப் பாலத்தின் இரு முனைகளிலும் இரு பாரிய பங்கர்கள் அமைக்கப்பட்டு இராணுவத்தினர் இரவு பகலாக 24 மணி நேரமும் அங்கு காவலில் உள்ளனர்.

பெற்றோலியம் கூட்டுத்தாபனம், கல்லடி பிரதான மின்மாற்றிகள், நாவற்குடா பொலீஸ் நிலையம் ஆகியன முன்பாகவும் புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் மட்டக்களப்பில் பல இடங்களிலும் உள்ள பொலீஸ் நிலையங்களிலும் இராணுவ பொலீஸ் சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (உ-3)

## அரசின் தீர்வுத் திட்டம் இன்று தெரிவுக் குழுவிடம்

கொழும்பு, மார்ச் 7

அதிகாரப் பரவலாக்கல் பற்றிய அரசின் திட்டம் இன்று நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

22 பேர் கொண்ட இந்த நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பெரும்பான்மையானவர்கள் அரச தரப்பினர் ஆதலால் யோசனைகளை நிறைவேற்றுவதில் கஷ்டமிருக்காது என்று சொல்லப்படுகின்றது.

அதிகாரப் பரவல் திட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் குறித்து ஆராய்ந்து தேவையான குறிப்புக்களை தயாரிக்கும் பொறுப்பை அரசியல் சட்டவல்லுநர் கே. என். சொக்ஸி யிடம் ஐ. தே. க. ஒப்படைத்துள்ளது.

அரசில் அங்கம் வகிக்கும் ஜனநாயக ஐக்கிய முன்னணியும் மற்றும் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியும் அதிகாரப் பரவல் குறித்து கடுமையாக விமர்சிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு தனி ஆள் பாவிப்பில் இருந்தது. புதிய பெருகு அழியாது மிக பார்வையாகவும் சிறந்த முறையில் தொழில் செய்யக் கூடிய நல்ல நிலையிலும் உள்ளது. பார்வையிட்டு, பேசி, விலை தீர்க்க மொடேன் பத்திரிகைக் கடை, நெல்லியடிச் சந்தி, பஸ் நிலையத்திற்கு முன்னால். (சி-4089)

புத்தம் புதிய Ladies லுமாலா சைக்கிள் ,Steel Cabinet, T. V. B/W 20'' A/C, D/C (12 Volt), தஞ்சாவூர் வீணை, புதிய பற்றரி 12 Volt, 12 Amp., வயலின். அரை Lade's சைக்கிள், Auto கமெரா. தொடர்பு: ச. இராசசேகரம், சங்கம் ஒழுங்கை, டச் வீதி, சாவகச்சேரி. (40912)

### காணி விற்பனைக்கு

மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கண்மையில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (குடியிருக்க / விவசாயம் செய்ய/தொழில் சாலை அமைக்க உகந்தது) தொடர்பு: அண்ணாமலை பாலகிருஷ்ணன், சோமஸ்கந்த சனசமூக நிலையத்திற்கு முன்னுள்ள வீடு, மட்டுவில் மத்தி. (40916)

### ஒப்படைக்கவும்

றோட்மாஸ்ரர் கேபிள் பிரேக் பெண்கள் சைக்கிள் ஒன்றுக்குப் பதிலாக மாணவர் அமைப்புச் செயலகம் சாவகச்சேரியில் லுமாலா லிவர் பிரேக் இலக்கம் E0035198 சைக்கிள் மாறி எடுத்தவர் தயவுசெய்து சாவகச்சேரி மாணவர் அமைப்புச் செயலகத்தில் ஒப்படைக்கவும். (49908)

### மணப்பெண் தேவை

இந்து மதத்தைச் சேர்ந்த 35 வயதுள்ள (நட்சத்திரம் பூரம் இலக்கினத்தில் செவ்வாய்) B Sc., (Engineer) U. K யில் வேலை பார்க்கும் மணமகனுக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ படித்த அழகான மணமகள் தேவை. தொடர்பு: இல. 103, மே/பா உதயன் கிளை, பருத்தித்துறை. (40367)

### திருமண சேவை

கே. கே. எஸ் றோட், மல்லாகம், வளர்மதி இல்லத்தில் இயங்கி வந்த துர்க்கா திருமண சேவை தற்பொழுது கந்த உடையார் லேன், பருத்தித்துறையில் இயங்கி வருகிறது என்பதனை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். (40323)

### தவறிவிட்டது

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகில் 04-03-96 இரவு 7-15 மணியளவில் எனது பிரயாணப் பையுடன் கல்வி சம்பந்தமான ஆவணங்களும், வைத்தியக் குறிப்பு, வங்கிப் புத்தகம் என்பனவும் தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் சிவா பல்பொருள் வாணிபம், டச்சு வீதி, சாவகச்சேரியில் ஒப்படைக்கவும். சன்மானம் தரப்படும். (40910)

### ENGLISH ஆங்கிலம் 96

Distinction, Credit O/L பெறுபேறடைய துரித மீட்டல். Spoken English பிற மாணவர்களுக்கும் கற்பிப்பார். ஆசிரியர் B Sc (Cey). Lond. Inter மே/பா. சரவணமுத்து, கமலாச்சி வேதவனப் பிள்ளையார் ஒழுங்கை, கல்வயல், சாவகச்சேரி. (40905)


## கிளிநொச்சியில்
# பாரத் ஸ்ரூடியோ

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிய பிரசித்திபெற்ற பாரத் ஸ்ரூடியோ தற்போது புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சியில் இயங்குகிறது.

★ அவசர பாஸ்போர்ட் படங்கள்
★ தேசிய அடையாள அட்டைப் படங்கள்
★ படத்தை ''என்லார்ஜ்'' (பெரிதாக்குதல்) செய்ய —
★ மங்கள நிகழ்ச்சிகளை கலர் படம் எடுக்க —

நீங்கள் நாட வேண்டிய இடம்:

**பாரத் ஸ்ரூடியோ**
புகையிரத நிலைய வீதி,
கிளிநொச்சி.

(சி-4083)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் மு. புருசோத்தமன்

(ஆயுள்வேத மருந்தாளர், வலி மேற்குப் பிரதேச சபை உப அலுவலகம், சங்கானை)

எமது சங்கானை உப அலுவலகத்தில் தொடர்ந்து 25 வருடங்களுக்கு மேல் கடமையாற்றி சக ஊழியர்களுடன் அன்பாகவும், பண்பாகவும் நடந்து எமது உள்ளங்களில் என்றும் நீங்காத உத்தமனாம் புருசோத்தமனுடைய இழப்பினால் அல்லலுறும் அன்னாரது மனைவி மக்களுக்கு எமது உப அலுவலக நலன் புரிச் சங்க ஊழியர்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்கும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

இங்ஙனம்
ஊழியர் நலன்புரி சங்கம்,
வலி. மேற்கு பிரதேச சபை,
உப அலுவலகம்
சங்கானை.

(40914)

# முன்கூட்டியே தேர்தலை நடத்தும் எண்ணம் இல்லை!

## சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டி நடத்தும் நோக்கம் தமக்கு இல்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை அரசாங்க நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

ஆறு ஆண்டுகள் ஆட்சிபுரிய மக்கள் எமது அரசுக்கு ஆணை வழங்கியுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இடம்பெற்றிருக்கும் — ஸ்ரீமானி அத்துலத்முதலி தலைமையிலான — புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இடையிலான உறவுகள் சீர்கெட்டு வருவதை அடுத்து, தமக்கு முழு ஆதரவளிக்கக்கூடிய அரசு ஒன்றை அமைப்பதற்காக தற்போதைய நாடாளுமன்றைக் கலைத்து தேர்தலை நடத்த சந்திரிகா முற்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபட்டு வந்தது. (உ-3)


# பதவி வெற்றிடம்

## நிர்வாக உத்தியோகத்தர்

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்ற அலுவலக, வெளிக்கள வேலைகளில் அனுபவமுள்ள ஆண்பாலாரிடருந்து மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளக் கூடியவராகவும் நீண்டநேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பத்தை **11- 3- 96** ஆம் திகதிக்கு முன்னர் சரசாலை, சாவகச்சேரியில் இயங்கும் உதயன் பணிமனைக்கு அல்லது கிளிநொச்சியில் வை. எம். சி. ஏ. கட்டடத்தில் இயங்கும் உதயன் கிளைப் பணிமனைக்கு அனுப்பி வைக்கவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.



# வாடகைக்கு வீடு உடன் தேவை

மந்திகை அல்லது சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு ஒரு மைல் சுற்றளவில் நன்னீர் கிணறு மலசல கூட வசதியுடன் தனி வீடு வாடகைக்கு உடன் தேவை முற்பணமும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி;

1. சு. புவனேஸ்வரன்,
உடுப்பிட்டி வீதி,
வதிரி,
கரவெட்டி.
(தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகத்திற்கு அருகில்)

2. நடராசா,
சோதிலிங்கம்.
யாழ்ப்பாணம்,
கபால்கந்தோர்,
இந்து மகளிர் கல்லூரி,
சாவகச்சேரி.

(40979)


# கண்ணீர் அஞ்சலி

செல்வி
## எம். வி. ஹட்சின்ஸ் அம்மையார்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் முன்னாள் உப அதிபரும், அக்கல்லூரியின் அநாதை விடுதியின் ஸ்தாபகரும், பாடசாலையின் முன்னேற்றத்துக்கு முப்பது வருடங்களுக்கு மேலாக பல வழிகளில் உழைத்தவருமாகிய செல்வி எம். வி. ஹட்சின்ஸ் அம்மையார் அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோப்பாய்/கிறிஸ்தவ கல்லூரி அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்

(40917)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி,
அரசடி விநாயகர் ஆலய பிரதம குருக்கள்

## சிவஸ்ரீ பரமசாமி ஐயர் சிவஞானசுந்தரக் குருக்கள்

5 - 3 - 96 இல் சிவபதம் அடைந்தார். அன்னாரின் கிரியைகள் 6 - 3 - 96 இல் சப்பச்சி மாவடி பிள்ளையார் கோவில் வீதி, சங்கத்தானையில் நடைபெற்று கண்ணாடிப்பிட்டியில் தகனக்கிரியை செய்யப்பட்டது. அவரின் குடும்பத்தினருக்கு எமது பரிபாலன சபை ஆழ்ந்த அனுதாபத்தை தெரியப்படுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

பரிபாலன சபை
அரசடி விநாயகர் ஆலயம்
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(40918)

# மரண அறிவித்தல்கள்

## MISS MURIEL VIOLET HUTCHINS

செல்வி
## மியூறியல் வயலற் ஹட்சின்ஸ்

கிளிநொச்சி ''கருணா நிலையம்'' ஸ்தாபகரும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி - ஆகியனவற்றின் முன்னாள் உப அதிபருமான செல்வி ஹட்சின்ஸ் அம்மையார் 04 - 03 - 1996 மாலை நித்தியத்திற்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று (06 - 03 - 96) புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு கருணா நிலைய ஆலயத்தில் நடைபெற்றது

திருமதி தயா T மோகன்
அதிபர்
கருணா நிலையம்.

(சி-4088)

## நாகரத்தினம் குணபாலசிங்கம்

(L. L. B.)
(சட்டத்தரணி - கைதடி)

தெல்லிப்பழை பன்னாலையைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கை வாழ்விடமாகவும் கொண்ட நாகரத்தினம் குணபாலசிங்கம் (06-03-1996) நேற்று காலமானார். அன்னார் நாகரத்தினம் – சின்னத்தங்கச்சி அவர்களின் அன்பு மகனும், விசுவநாதர் – சிவபாக்கியம் அவர்களின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், கலைச்செல்வி, சிவரஞ்சினி, விசுவநாத், தமயந்தி, கலைமகள் ஆகியோரின் அன்புத் தந்தையும், மயில்வாகனம் (ஆசிரியர், சென். ஜோன்ஸ் கல்லூரி), திருபாலசிங்கம் (ஹேகெம் நிறுவனம், கிளிநொச்சி), தனபாலசிங்கம் (ஆசிரியர், வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகரத்தினம் (இங்கிலாந்து), கனகசபாபதி (பரிபாலன சபை தலைவர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (7-3-96) காலை 10-00 மணிக்கு கைதடி தெற்கு இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. மயில்வாகனம் (சகோதரர்)
கைதடி தெற்கு,
கைதடி.

(40923)

## திருமதி நாகலிங்கம் தங்கம்மா

நல்லூர் 43, செட்டித்தெருவை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நாகலிங்கம் தங்கம்மா நேற்று 06 – 03 – 96 காலை சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற S. S. நாகலிங்கம் அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம், சிவயோகம், செல்வரட்ணம் (செவ்வந்தி — கனடா), நவநீதம் (றோஸ்), குணபூஷணம் (மல்லிகா — நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரஸ்வதி (லண்டன்), சிவசிங்கம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற Dr. ஜெகதீசன், நாகராஜா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விஸ்வா, லதா, சுதா, நத்திரா, வாஹினி, நிலானி, ஜீவா, லோகா, சிவகிரி, சுரேஷ், பிரிதிவிராஜ், மோகன்ராஜ், இந்திரஜித், யசோதரா, ஜெகந்தா, ஜெய்கிஷன், ஜெய்ஹரன், ஜெய்ராம், யக்ஷகானா, கிருஷ்ணகானா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(07-03 96) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் தற்காலிக முகவரியில் நடைபெற்று பூதவுடல் தாவளை, இயற்றாலை, கொடிகாமம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சிவயோகம் சிவசிங்கம்,
திருமதி நவநீதம் ஜெகதீசன்
(தலைவர், சமூக அபிவிருத்தி - மன்றம்)

முகவரி:-
மே/பா நா. இராசையா,
தாவளை இயற்றாலை,
கொடிகாமம்.

(40981)

## வேலாயுதம் சிறிக்குமார்

சுழிபுரம் மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட வேலாயுதம் சிறிக்குமார் (நுணாவில் ரெட்ணா வெதுப்பக ஊழியர்) நேற்று [6.03.96] அன்று அகால மரணமானார்.

அன்னார் பண்டாரி வேலாயுதம் – அற்புததேவி ஆகியோரின் அன்பு மகனும், சிறிறஞ்சன், காலஞ்சென்ற சிறிநந்தன், சிறிமோகனதாஸ், அப்பன், மகாலட்சுமி, அன்னலட்சுமி, சிறிமுரளிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [7.03.96] வியாழக்கிழமை காலை 2 மணிக்கு ரெட்ணா வெதுப்பகத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்களை ஏற்றுக் கொள்ளுமாறு அறியத்தருகிறோம்.

தகவல்:-
ப. வேலாயுதம்
(தந்தை)
நுணாவில்.

(40982)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரசு தயாராகிறது

ஸ்ரீலங்கா அரசாங்கம் புதிதாகக் கொள்வனவு செய்த 'கிபிர்' போர் விமானத்தைப் பயன்படுத்தி படையினர் நேற்று முன்தினம் பரந்தன் பகுதியில் குண்டுவீச்சு நடத்தினர்.

அதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னதாக, வலிகாமத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், தென்மராட்சிப் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது எறிகணைத் தாக்குதல்கள நடத்தி பொதுமக்களைக் கொன்றார்கள். பலரைக் காயமுற வைத்தார்கள்.

இதற்கு முன்னரே வடமராட்சிப் பகுதி மீது அடிக்கடி பலாலியில் இருந்து எறிகணை வீச்சுக நடத்தப்பட்டு வருகிறது.

வலிகாமத்தை ஆக்கிரமித்தது போல, வடக்கின் ஏனைய பகுதிகளையும் கைப்பற்றுவதில் அரசு தொடர்ந்தும் தீவிரமாக உள்ளது என்பதனையே இந்தக் குண்டு வீச்சுத் தாக்குதல்களும், எறிகணைத் தாக்குதல்களும் காட்டுகின்றன.

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடுதலைப் புலிகளின் கையினால் உண்டான ஆயுத தளபாட இழப்புகளை ஈடுசெய்யும் விதத்தில் —

நவீன போர்க் கப்பல்கள், தாக்குதல் படகுகள், ரோந்து படகுகள், போர்விமானங்கள் என்பவற்றை வாங்குவதற்குக் கடந்த மூன்று மாத இடைவெளியை அரசு தக்கவாறு பயன்படுத்தியிருக்கிறது.

அதேவேளை, தனது படையணிகளைப் பெருக்குவதற்காக புதிதாக ஆட்திரட்டல்களையும் நடத்தியிருக்கிறது.

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டத்தைப் பெயருக்கு முன்வைத்த பின்னர், நான்காவது ஈழப் போரை ஆரம்பிக்கும் நோக்குடனேயே அதற்கான தயார் வேலைகளில் இப்போது அரசு ஈடுபட்டிருக்கிறது என்று கொள்ளலாம்.

இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை என்றும், தமிழர்களுக்கு உரிமை வழங்க எடுக்கப்படும் சிறு முயற்சி கூட நாட்டைப் பிளவுபடுத்திவிடும் என்றும் கூறும் பௌத்த பீக்குகளும், அவர்களின் பேரினவாதமும் இருக்கும் வரை —

தமிழர் பிரச்சினையை அரசியல் முறையில் தீர்த்து வைக்கும் மனவிருப்பம் சிங்களத் தலைவர்களுக்கு ஒரு போதும் வரப்போவதில்லை.

அதனால் போரின் மூலம் தமிழர்களை அழித்தொழித்து, அவர்களை எண்ணிக்கையில் மேலும் சிறுபான்மையினர் ஆக்கி, அவர்களின் தாயகத்தை ஆக்கிரமித்து —

அவர்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்து அடிமை குடிமைகளாக்கி விடுவதே சிங்களத் தலைவர்களின் உளவிருப்பம்.

ஆகையால், தமிழர்கள் தமது விடுதலைக்கான போர்க் குணத்தை மேலும் வலிமைப் படுத்த வேண்டிய தேவை உண்டு.

இதுவரை எதிர்கொண்ட போரையும் அதன் விளைவுகளையும் விட, பலமடங்கு பெரிய போருக்கும் அதன் விளைவுகளுக்கும் முகங்கொடுக்கும் விதத்தில் மனதில் தைரியத்தையும் உறுதியையும் வளர்க்க வேண்டும்.

மன உறுதி தளர்ந்தால் சிங்களவர்களுக்கு அடிமையாகி விடுவோம் என்பதனைத் தமிழர்கள் ஒரு கணமேனும் மறந்துவிடலாகாது.

# சந்திரிகா பிடித்த பிள்ளையார் குரங்காக மாறியதால் பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 7

குமரபுரம் படுகொலைகள் காரணமாக சர்வதேச மட்டத்தில் அரசாங்கத்தின் மனித உரிமை மீறல் குறித்து எழுந்த கண்டனத்தைச் சமாளிப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா தந்திரம் ஒன்றைக் கையாண்டார் என்று இப்போது அறியப்படுகிறது.

ஜே. வி. பி. காலத்தில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், வழக்குத் தொடரப்படவிருந்த சுமார் முப்பது இராணுவ அதிகாரிகளையும், 200 சிப்பாய்களையும் கட்டாய லீவில் அனுப்புமாறு —

சந்திரிகா, இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவைப் பணித்திருந்தார்.

அதனை ''த ஐலன்ட்'' ஆங்கிலப்பத்திரிகை செய்தியாக வெளியிட்டதும், இராணுவ வட்டாரங்களில் பெரும் பரபரப்பும், அதிருப்தியும் ஏற்பட்டன.

இத்தனைக்கும் மனித உரிமைகள் மீறல் சம்பவங்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் குறிப்பிட்ட 230 பேரிலும் பலர் இடைப்பட்ட காலத்தில் பதவி உயர்வு பெற்றார்கள் என்றும், இன்னும் சிலர் சிறப்பான சேவைக்கு விருதுகளைப் பெற்றார்கள் என்றும், வேறு பலர் வடக்கு—கிழக்கு யுத்த களத்தில் பணிபுரிபவர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

சர்வதேச அரங்கைத் திருப்திப்படுத்தி நல்ல பெயர் கேட்பதற்காக சந்திரிகா விடுத்த பணிப்பு, இராணுவ வட்டாரங்களில் பெரும அதிருப்திப் புயலைக் கிளப்பியது.

அதனை அடக்குவதற்காக பத்திரிகைச் செய்தி தவறு என்று பாதுகாப்பு அமைச்சு மறுப்பு அறிக்கை ஒன்றை விட்டது.

18 மாதங்களுக்கு முன்னர் — சந்திரிகா ஆட்சிக்கு வந்தவுடன் — எடுத்திருக்க வேண்டிய ஒழுங்கு நடவடிக்கையை இப்போது அரசு எடுக்க முயன்றிருப்பது உலகத்தை ஏமாற்றுவதற்கான கண்துடைப்பே என்பது இப்போது எல்லோருக்கும் புரிந்திருக்கிறது. சந்திரிகா பிள்ளையார் பிடிக்கப் புறப்பட அது பெரும் குரங்காக மாறி விட்டது.! (அ)

## அதிபருக்கான கூட்டம் இன்று

சாவகச்சேரி, மார்ச். 7

1996ஆம் ஆண்டு ஒகஸ்டில் நடைபெறும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்புவது தொடர்பாக அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

வலயம் ஒன்றைச் சேர்ந்த தரம் 1 ஏப், 1சி பாடசாலைகளின் அதிபர்களை இக்கூட்டத்தில் சமூகமளிக்குமாறு வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு இ. சிவானந்தன் கேட்டுள்ளார். (இ-3)

## முத்திரைக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சி, மார்ச் 7

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தபாலகங்களில் முத்திரைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. (இ-124)

### இடம் பெயர்ந்தோருக்கு

## அத்தியாவசியப் பொருள் ஒதுக்கீடு குறித்துக் கூட்டம்

### இன்று கொழும்பில் நடைபெறும்

வலிகாமத்தில் இருந்து இடப்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப்பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்கள் ஒதுக்கீடு குறித்து இன்று கொழும்பில் நடைபெறும் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வடக்கின் அரச அதிபர்கள் கலந்து கொள்வர்.

இடம்பெயர்ந்தவர்கள் எண்ணிக்கையில் இருந்து வரும் முரண்பாடான நிலையை நீக்கும் வகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்கள் தமது புள்ளி விவரங்களை சமர்ப்பிப்பார்கள்.

இதனடிப்படையில் அந்த அந்த மாவட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### வடபகுதி மாணவர்களுக்கான

## புதிய பாடப் புத்தகங்கள் கொழும்பில் தேக்கம்!

சாவகச்சேரி, மார்ச். 7

வடபகுதி மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை எடுத்து வருவதற்கு அனுமதி வழங்க பாதுகாப்பு அமைச்சு தொடர்ந்து பின்னடித்து வருகிறது

இதனால் யாழ். மாவட்ட மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பாடப் புத்தகங்கள் கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன.

இதேவேளை வன்னிப்பகுதிப் பாடசாலைகளுக்கான பாடப்புத்தகங்கள் எடுத்து வரப்பட்டு வவுனியாவில் தேங்கிக் கிடப்பதாகவும் —

அவற்றை வவுனியாவுக்கு வடக்கே எடுத்துவர இராணுவத்தினர் இதுவரை அனுமதி அளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## பாடசாலைகளுக்கான கொட்டகை, தளபாடம்

### ரூ. 50 லட்சம் ஒதுக்கீடு

சாவகச்சேரி, மார்ச் 7

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த பாடசாலைகளை வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியில் இயங்க வைப்பதற்காக புதிய கொட்டகைகளை அமைத்துக் கொள்வதற்கும் —

புதிய தளபாடங்களைச் செய்வதற்கும் — 50 லட்சம் ரூபா நிதியை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஒதுக்கியுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு மேலதிகமாகத் தேவைப்படும் கொட்டகைகளின் ஒரு தொகுதியை அமைப்பதற்கும் —

புதிய தளபாடங்களைச் செய்வதற்கும் — நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## கடத்தப்பட்ட 11 தமிழர்: மன்னிப்புச் சபை கேள்வி

கொழும்பு, மார்ச் 7

கடந்த டிசம்பர் மாதம் நடுப்பகுதியில் மட்டக்களப்பு உன்னிச்சை, கோப்பாவெளி கிராமங்களில் இருந்து சிங்கள ஊர்காவல் படையினரால் கடத்திச் செல்லப்பட்ட 11 தமிழர்களின் நிலை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசிடம் கேட்டுள்ளது.

காணாமற்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள இவர்கள் தற்போது எங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தையும் அது இலங்கை அரசிடம் கேட்டுள்ளது.

டிசம்பர் 17 ஆம் திகதி உன்னிச்சை பகுதியில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த சமயம் 6 தமிழர்களும் —

டிசம்பர் 21 ஆம் திகதி கோப்பாவெளியில் விறகு பொறுக்கச் சென்ற 5 தமிழர்களும் — சிங்கள ஊர்காவல் படையினரால் கடத்திச்செல்லப்பட்டிருந்தனர்.

இவர்களின் கதி இதுவரை தெரியவரவில்லை.

## நிதித்துறை அறிவித்தல்

### வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 8ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ முத்தையா மயில்வாகனம் — இல 32, சந்தன மாதா கோவில் வீதி, சுண்டுக்குழி.

★ லக்சுமி பரமானந்தன் — பெருமளவு, இடைக்காடு, அச்சுவேலி.

★ கனகபூபதியம்மா செல்லத்துரை அல்லது கிருபாசக்தி மகேந்திரம் — பொன்னாலை, சுழிபுரம்.

★ கந்தசாமி வசந்தகுமார் — அளவெட்டி தெற்கு, அருவம்பற்று, அளவெட்டி.

★ தெய்வேந்திரம் நகுலேஸ்வரன் — புது வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

★ நடராசா இராசபாதம் — சாவற்கட்டு, ஆனைக்கோட்டை.

★ வள்ளிபுரம் இராஜரட்ணம் — வட்டு கிழக்கு, சித்தன்கேணி, கலைநகரம்.

★ சுந்தரம் கந்தையா அல்லது பரந்தா அரசரெட்ணம் — திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.

★ வேலுப்பிள்ளை முருகேசு ஆனந்தராஜா — இல. 111/13, ''லீலா வாசா'' இராஜசிங்கம் வீதி, குருநகர்.

★ சின்னத்துரை ஆறுமுகம் — 2ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை

★ கௌசலா செல்லையா (சுகுணா)— ஆசியமணி செல்லையா வீதி, கலைநகர், அளவெட்டி தெற்கு

★ மகேஸ்வரி சுப்பிரமணியம் — ''மிதிலை'' Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

★ சிறிகாந்தநாதன் கருணாநிதி — மே/பா த. நடராசா, நீர்வேலி மத்தி

★ அருளம்மா சின்னத்துரை — இல. 200, கண்டி றோட், அரியாலை.

★ கமலராணி அரசரட்ணம் — ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு.

★ தபோதினி தனநாயகம் — சம்பியன் லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ துரைச்சாமி குமாரசாமி — இல 99, பொன்னம்பலம் வீதி, அரியாலை

★ சரோசா சிறிஸ்கந்தராசா — வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை, துணைவியடி.

★ கார்த்திகேசு செல்வரெட்ணம் — இல.48/4, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு

★ தம்பிப்பிள்ளை தேவராஜா — பெண்கள் பாடசாலை மேற்கு ஒழுங்கை, உடுவில்.

★ சின்னவன் ஆண்டி — வினோபதி சனசமூக நிலையம், கோயிலடி, நீர்வேலி.

★ சியாமளா தேவி இராமலிங்கம் — இல. 72/7, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

★ தம்பிராசா பொன்னையா — இல. 21/9, அத்தியடி, புது வீதி, யாழ்ப்பாணம்.

★ அன்னலட்சுமி கிருஷ்ணபிள்ளை — ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

★ சரஸ்வதிப்பிள்ளை கணபதிப்பிள்ளை — இல. 18, கதிரவேலு ஒழுங்கை, அரியாலை.

★ புவனேஸ்வரி கனகசிங்கம் அல்லது கனகரத்தினம் நடராசா — இல 219/1, கண்டி வீதி, அரியாலை.

★ ஸ்ரான்லி பிரான்சிஸ் — இல. 19/2, ஈச்சமோட்டை றோட், யாழ்ப்பாணம்.

★ சண்முகம் கார்த்திகேசு — பனிப்புலம், பண்டத்தரிப்பு.

★ சின்னத்தம்பி ஞானமூர்த்தி — ஞானபதி, இணுவில் மேற்கு.

★ சிவபாக்கியம் சின்னையா — சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.

★ தில்லை நடராசா அல்லது துரைரட்ணம் — மே/பா A. சரஸ்வதி, மறவன்புலவு, சாவகச்சேரி.

★ வீரசிங்கம் செல்வராசா — மே/பா M. சண்முகராஜா, அறுகுவெளி, தனங்கிளப்பு.

★ இரகுநாதன் அல்லது புஸ்பராணி — தச்சன் தோப்பு சந்தி, நாவற்குழி.

★ ஜமுனாவதி செல்வம் — மறவன் புலவு, சாவகச்சேரி.

★ V. தம்பு — கோவிலாக்கண்டி மத்தி, கைதடி. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக நிதி அதிகாரம் இனி மாவட்ட செயலகங்களுக்கு!

கொழும்பு, மார்ச் 7

கடந்த 5 வருடங்களாக பிரதேசச் செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிதி தொடர்பான பொறுப்புக்கள் அனைத்தும் அரசாங்கத்தின் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தின் கீழ் மீண்டும் மாவட்ட செயலகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான சுற்று நிருபம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் சகல மாவட்ட செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1996 ஆம் நிதியாண்டின் தொடக்கத்தில் இருந்து மாவட்ட செயலாளரே கணக்குப் பொறுப்பு உத்தியோகஸ்தராகச் செயற்படுவார் இவரின் அதிகாரத்தின் கீழ் நிதி விடயங்கள் யாவும் கொண்டு வரப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகம் அதன் கீழ் உள்ள பிரதேச செயலகங்களுக்கு தேவைக் கேற்றவாறு நிதியினை வழங்குவதோடு பூரண நிதி நிர்வாகக் கட்டுப்பாடுகளையும் கொண்டிருக்கும்.

பிரதேச செயலகம் மாவட்ட செயலாளரின் கீழ் ஒரு கணக்கு கூறாகவே செயற்படும்.

கடந்த காலங்களில் பிரதேச செயலகங்கள் தத்தமது தேவைக்கேற்றவாறு நிதியினைப் பெற்றுக் கொள்ள திறைசேரியுடனும், அமைச்சுக்களுடனும் நேரடியாகத் தொடர்பு வைத்திருந்தது.

ஆனால் புதிய திட்டப்படி மாவட்ட செயலாளரே நேரடி தொடர்புகளைக் கொண்டு தேவைக்கேற்ற நிதியினைப் பெற முடியும்.

பிரதேச செயலர்கள் மாவட்ட செயலாளருடன் மாத்திரமே தொடர்பு கொள்ளலாம்-

பிரதேச செயலாளர் மற்றும் செயலகத்தில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகளைக் கூட இனிமேல் மாவட்ட செயலாளரே உறுதிப்படுத்த வேண்டும்.

இவை தவிர ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் அனைத்தும் பிரதேச செயலரின் கீழ் தொடர்ந்து இருக்கும். (உ-3)

# யுத்த ஆபத்துள்ள நாடு என்ற கூற்றை இலங்கை அரசு ஆட்சேபிக்கும்

லண்டன், மார்ச் 7

இலங்கையை அதிக அளவு யுத்த ஆபத்து நிறைந்த நாடு என்று, லண்டனில் இருந்து செயற்படும் ''வெயோட்ஸ்'' நிறுவனம் தெரிவித்ததுக்கு, இலங்கை அரசு தனது ஆட்சேபனையைத் தெரிவிக்க உள்ளது.

உலக நாடுகளில், யுத்த ஆபத்துக்களை மதிப்பிடும் இந்த நிறுவனம் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இலங்கையை யுத்த ஆபத்து நிறைந்த நாடு என்று தெரிவித்திருந்தது.

இந்த முடிவினால் இலங்கை வரும், இலங்கையிலிருந்து புறப்படும் கப்பல்களுக்கு ஆபத்து காப்புறுதியாக 25 சதவீத மேலதிக கட்டணம் செலுத்தவேண்டி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கொழும்புத் துறைமுகம் வரும் கப்பல்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டதுடன், இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகமும் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதாக 'ராவய' செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

# தற்காலிக கொட்டில்களில் வசிக்கும் 20,000குடும்பங்களுக்குமெழுகுதுணி

## செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வழங்கும்

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் தற்காலிக கொட்டில்களில் வசிக்கும் 20 ஆயிரம் குடும்பங்களுக்கு செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு மெழுகு துணிகளை வழங்க இருக்கிறது.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் நேரடியாக மக்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு சென்று 15 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட மெழுகு துணிகளை வழங்குவர்.

இதுவரை கைதடி, வரணிப் பகுதியில் 4 ஆயிரம் குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து வழங்கும்பணி நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை—வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும், முதியோர் இல்லங்களுக்கும் படுக்கை விரிப்புகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் வழங்கி வருகின்றனர். (இ-3-117-13)


## மரண அறிவித்தல்

### அமரர் கபிரியேல் சூசை

இளவாலையைப் பிறப்பிடமாகவும், ஆனந் குடியிருப்பு, அல்லாரையைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் சூசை 04-03-96 இல் இறைவனடி சேர்ந்தார்.

இவர் யக்கோவாவின் அன்புக் கணவரும், மலர், பற்றிமா, அல்போன்ஸ், சேவியர், வண. பிதா ஜோர்ச் (பங்குத்தந்தை, கூழாமுறிப்பு), ராஜம் ஜெபநேசன் ஆகியோரின் அன்புத்தந்தையும், மரியநாயகம், செல்லையா, சேவியர், யசோதா, பூபதி, ஆனந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பேபி, தர்ஷன், சுபோ, அமல், விமல், நிமல் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (07-03-96) வியாழக்கிழமை காலை 09-00 மணிக்கு ஆனந் குடியிருப்பு குழந்தையேசு ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் சாவகச்சேரி புனித விகோரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
வண. பிதா ஜோர்ஜ்
பங்குத்தந்தை,
கூழாமுறிப்பு.

(40919)


2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

## உயர்தர மாணவருக்கு

கொழும்பு மார்ச் 7

1996 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்கு தோற்றவுள்ள வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள மாணவர்கள் தமது பாடசாலை அதிபர்களை உடன் சந்திக்குமாறு வலயம்I மற்றும் வலயம்II ஆகியவற்றின் வலயப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர். (உ-3)

## 6 ரோந்துப் படகு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் மூன்று படகுகளை அமெரிக்காவிடமிருந்து பெறுவதற்கு ஸ்ரீலங்கா கடற்படை விரும்புவதாகவும் —

அவற்றை வழங்குவதற்கு அமெரிக்கா பின் நிற்காது என்று ஸ்ரீலங்கா அதிகாரிகள் கருதுவதாகவும் —

அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

ஈழப் போராட்டம் ஆரம்பித்த காலம் முதல் ஸ்ரீலங்காவுக்கு தாக்குதல் வலுவைத் தரக் கூடிய ஆயுதங்களை வழங்குவதற்கு மறுத்து வந்த அமெரிக்கா, இப்போது கடற்படைக்கு அதிவேகப் படகுகளை வழங்குவதற்கு முன்வந்திருப்பது ஸ்ரீலங்கா அரசுக்கு குறிப்பிடத்தக்க ஓர் வெற்றி என பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க தயாரிப்பு என்ஜின்கள் பொருத்தப்பட்ட ஆறு ''கிபிர்'' ரக ஜெட் விமானங்கள் இஸ்ரேல் ஸ்ரீலங்காவுக்கு விற்பனை செய்வதற்கு எத்தனவே அமெரிக்கா அனுமதி வழங்கியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

# யாருக்கும் ஆதரவு இல்லை ரஜனிகாந்த் அறிவிப்பு

சென்னை, மார்ச் 7

இந்தியாவில் விரைவில் நடைபெறவிருக்கும் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களின் போது எந்தக் கட்சியையும் தாம் ஆதரிக்கப் போவதில்லை என்று பிரபல திரைப்பட நடிகர் ரஜனிகாந்த் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு அவரின் ஆதரவை பெரிதும் நம்பியிருந்த இந்திரா காங்கிரஸ் மற்றும் எம். ஜி. ஆர். முன்னணி ஆகிய கட்சிகளுக்கு பலத்த அடி எனக் கூறப்படுகின்றது. (உ-3)

# வீதியில் நித்திரை செய்தவர் லொறி விபத்தில் மரணம்

மந்திகை, மார்ச் 7

நுணாவில் பிரதான வீதியில் புதன்கிழமை அதிகாலை ஒரு மணிக்கு இடம்பெற்ற லொறி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

சுழிபுரத்தில் இருந்து இடம் பெயர்ந்து சாவகச்சேரி கல்வயலில் வசித்து வந்த வேலாயுதம் ஸ்ரீக்குமார் (வயது 25) என்ற இளைஞனே மரணமானவராவார்.

நுணாவிலில் பேக்கரி ஒன்றில் பணிபுரிந்த இந்த இளைஞன், வேலைக்குச் சென்ற வேளை இளைப்பாறுவதற்காக அருகில் இருந்த வீதியில் இருந்தபோதே தற்செயலாக அவ்விடத்தில் சரிந்து நித்திரையானதாகவும், அவ்வேளை வீதியால் வந்த லொறி அவர் மீது ஏறிபடு காயமடைந்ததாகவும் சக தொழிலாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தியவேளை அங்கு மரணமானார். (அ-15)

## பங்கீட்டு அட்டைக்கு பற்றரி

தென்மராட்சி, மார்ச் 7

ரோச் மற்றும் வானொலிப் பெட்டிகளுக்குப் பயன்படுத்தப்படும் ''பற்றரி'' கள் இப்போது பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

நேற்றுத் தொடக்கம் பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு ஒரு சோடி பற்றரி வீதம் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகிக்கின்றன.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட பற்றரிகள் சோடி நூறு ரூபாவுக்கு விநியோகிக்கப்படுகிறது. (அ-117)

## உதவிப் பண கொடுப்பனவு

தென்மராட்சி, மார்ச் 7

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மாதாந்த பொது உதவிப் பணம் பெறுபவர்களின் ஜனவரி, பெப்ரவரி மாதக் கொடுப்பனவுகள் அந்தந்தப் பிரிவு அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வருடம் புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கும் இக்கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினர் தெரிவித்தனர். (அ-117)

## "கெல்ற்" பாடநெறி

சாவகச்சேரி, மார்ச் 7

பல்கலைக் கழகங்களுக்கு 94/95 ஆம் ஆண்டு பாடநெறிகளுக்குத் தெரிவான மாணவர்களுக்கான 'கெல்ற்' ஆங்கில பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இம்மாணவர்களை தென்மராட்சியில் டிறிபேர்க் கல்லூரியிலும், வடமராட்சியில் ஹாட்லிக் கல்லூரியிலும் இணைப்பாளர்களை எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சந்தித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கேட்டுள்ளார். (உ-3)

## கூட்டணி எதிர்ப்பு

வடக்கு – கிழக்கு மாகாணத்திலும், வேறு சில இடங்களிலும் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 104 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஈ.பி.டி.பி., புளொட் மற்றும் இ.தொ.கா. ஆகியவற்றின் உறுப்பினர்கள் அரசுடன் சேர்ந்து வாக்களித்தனர்.

இலங்கை முற்போக்கு முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர். ஐ. தே. க. வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. (உ-3)

## சைக்கிளிலிருந்து வீழ்ந்து மரணம்

தென்மராட்சி, மார்ச் 7

சைக்கிளில் வந்தபோது மயங்கி வீழ்ந்த சட்டத்தரணியொருவர் மரணமான சம்பவம் நேற்றுக்காலை மீசாலையில் இடம்பெற்றது

மீசாலை ஐயா கடையடியில் இடம்பெற்ற இச்சம்வத்தில், தெல்லிப்பழை பன்னாலையைச் சேர்ந்த நா. குணபாலசிங்கம் (வயது 46) என்ற சட்டத்தரணியே மரணமானவராவார். இவர் கைதடியில் வசித்தவர் என அறியவந்தது. (அ-117)

## மதகுரு கைது

கண்டி வை. எம். சி. ஏ. கட்டடத்தில் தங்கியிருந்த தமிழ்க் கத்தோலிக்க மதகுரு ஒருவரும், தமிழ்ப் பெண் ஒருவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப மதகுரு மன்னாரில் இருந்து வந்து அங்கு தங்கியிருந்தாராம்.

## வவுனியாவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாகவும் —

காயமுற்ற பெண்மணி மரண விசாரணைகளின் போது தெரிவித்திருக்கின்றார்.

இதே பகுதியில் கடந்த டிசம்பரில் தமிழ்ப் பெண் ஒருவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி படுகொலை செய்த சம்பவம் தொடர்பாகவும் —

அந்தச் சம்பவத்தை மறைப்பதற்காக மற்றொரு தமிழர் ஒருவரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பாகவும் —

கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருந்த இராணுவச் சிப்பாய் அண்மையில் விடுவிக்கப்பட்ட பின்னர், கடந்த திங்கள் அதிகாலை முக்கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன.

முன்னைய இரட்டைக் கொலைகளை அம்பலப்படுத்திய தமிழரில் ஒருவரும் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்ட மூவரில் அடங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 07-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org